1993 அக்டோபர் 27] [திரு. எஸ். கண்ணப்பன்]

அரசு வருடாவருடம் அந்தப் பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சி.எம்.பி. வாய்க்காலைப் பொறுத்த மட்டிலே, உலக வங்கி திட்டத்திலே அடுத்த ஆண்டிலிருந்து சில பணிகளை செய்ய இருக்கிறோம். அப்படி வருகின்ற போது முடிந்த அளவு இந்த அரசு நிதி ஆதாரங்களை வைத்து அந்தப் பகுதியினுடைய கரைகளை சீரமைத்து கடைமடைப் பகுதிக்கு தண்ணீர் விட ஏற்பாடு செய்யும். அந்தப் பகுதியிலே பாசனம் சிறப்பாக இருப்பதற்கு எந்தவித தடையும் இல்லாமல் நடவடிக்கை அரசு எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

அரசு உறுதிமொழிக் குழு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதி மொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு. எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-94 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் (பத்தாவது சட்டமன்றப் பேரவை) பத்தாவது அறிக்கையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

6. அரசினர் சட்ட முன்வடிவு (அறிமுகம் செய்தல்).

நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் சட்ட முன்வடிவு, அறிமுகம் செய்தல். 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும். எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. டி. எம் செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்களுக்கான (திருத்தச்) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

பிற்பகல் 12–10

7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1993-94, அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1993-94 ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதி நிலை அறிக்கை, மாண்புமிகு நிதி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1993-94 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக் கூறும் விரிவான அறிக்கை இம்மாமன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்த மாமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள இத்துணை மதிப்பீடு, மொத்தம் ரூபாய் 123.36 கோடி நிதி ஒதுக்கத்திற்கு வகை செய்கிறது. இதில் ரூபாய் 104.07 கோடி வருவாய்க் கணக்கிலும், எஞ்சிய தொகையான ரூபாய் 19.29 கோடி மூலதன, கடன் கணக்குகளிலும் அடங்கும்.

2. வரவு–செலவுத் திட்டத்தை தாக்கல் செய்த பின்னர், அவசர செலவுகள் குறித்த சில இனங்களுக்கு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து அனுமதி வழங்கப்பட வேண்டியிருந்தது. எதிர்பாராச் செலவு நிதியில் இத்தொகைகளை மீண்டும் ஈடு செய்வதற்காகவே முக்கியமாக இத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்த மானியக் கோரிக்கைகளில் அடங்கியுள்ள முக்கியமான திட்டப்பணிகள் குறித்து நான் சுருக்கமாக கூற விழைகிறேன்.

3. மதுரை, வ. வு. சிதம்பரனார், கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, வட ஆற்காடு–அம்பேத்கார் ஆகிய மாவட்டங்களில் பட்டா விவரப் புத்தகம் வழங்கும் திட்டத்தை அரசு செயல்படுத்த அனுமதித்துள்ளது. இதற்குச் சிறப்பு பணியாளர்களை அனுமதியளித்துள்ளது. முதற்கண் செலவு செய்ய, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 1.73 கோடி வழங்கப்பட்டுள்ளது. இத்தொகை ''மானிய கோரிக்கை எண். 11. மாவட்ட நிருவாகம்'' என்பதன் கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.